
# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 07 புதன்கிழமை 23.11.2022 கதிர் 18


**இது ரகசியம் அல்ல!**

சுமந்திரன் எம்.பி. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விட்டுப் பிடிப்பவராகத் தெரிய வில்லை. நேற்றும் வரவு – செல வுத் திட்ட விவாத உரையில் ரணிலைவெளுத்துவாங்கினார் அவர். நேற்றைய அவரின் உரையின் ஒரு பகுதி ☞2



# ரணிலின் 'பட்ஜெட்' நிறைவேற்றம் 121 பேர் ஆதரவு; 84 பேர் எதிர்ப்பு

## வாக்களிப்பில் கூட்டமைப்பினர் எவரும் கலந்துகொள்ளவில்லை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் 2023 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 37 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 121 வாக்குகள் அளிக்கப் பட்டன. எதிராக 84 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ☞2

## உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசு முடிவாம்!

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்ச ரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இதனை தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ☞2

# சபையில் பிள்ளையானுக்கு சாணக்கியன் தக்க பதிலடி

## உடனடி விசாரணைக்கும் ஜனாதிபதியிடம் கோரிக்கை

பிள்ளையானின் ஊழல், மோசடி களைக் கண்டறிய விசேட ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

நேற்று (நேற்றுமுன்தினம்) ☞2



# தீர்வுக்கு வாய்ப்பு அளிக்கவே பட்ஜெட்டை எதிர்க்கவில்லை!

## நாடாளுமன்றில் சுமந்திரன் விளக்கம்

கொழும்பு, நவம்பர் 23

**"நீண்ட காலம் நீடிக்கும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண் பதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுப்பார் என்று ஜனாதிபதி கடந்த சில நாள்களாகத் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார். அந்தக் கூற்று குறித்து நாங்கள் அவநம்பிக்கை கொண்டாலும், அவரை நாங்கள் நம்பாவிட்டாலும், இந்தப் பிரச்சினையை பேசி தீர்க்க போகிறேன் என்று கூறும் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு காட்டிக் குழப்பினோம் என்ற குற்றச்சாட்டு எங்கள் மீது வரக்கூடாது என்பதற்காக இந்த வரவு – செலவுத் திட்டத்திற்கு எதிராக எங்கள் வாக்கை அளித்து எதிர்ப்பைக் காட்டும் நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ளக் கூடாது என்று தீர்மானித்திருக்கிறோம். – என்று நேற்று நாடாளுமன்றத்தில் அறி வித்தார் சுமந்திரன்.** ☞2



## பாடசாலைச் சீருடையுடனேயே மது அருந்திய ஐந்து மாணவர்!

பாணந்துறையில் உள்ள பிரபல பாடசாலை ஒன் றின் மாணவர்கள் 5 பேர் நேற்றுப் பிற்பகல் பாணந் துறை கடற்கரையில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை சீருடையில் மதுபானம் அருந்திக் கொண்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்ட அவர்கள் 16 மற்றும் 15 வயதுடைய மாணவர்கள் ☞10



## யாழில் பாக். தூதுவரை வரவேற்றார் மேயர் மணி

இலங்கைக்கான பாகிஸ்தானியத் தூதுவர் நாட் சௌத்திரி நேற்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணனைச் ☞10

## 'றோ' தலைவரே கொழும்பு வருகை

### ரணிலுடன் முக்கிய சந்திப்பு

இந்திய பிரதான உளவு அமைப்பான 'ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு' எனப்படும் 'றோ' அமைப்பின் தலைமை நிர்வாகி சமந்த் கோயலே இரகசிய பயண மொன்றை மேற்கொண்டு ☞10



## சேலையின்றி மாற்றுடையில் வந்த ஆசிரியைகளின் மீது நடவடிக்கை

சட்டம் மற்றும் கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை மீறி, பாடசாலைக்கு சேலை இன்றி வேறு ஆடைகளை அணிந்து சென்றமையோடு மாத்திரமின்றி , அந்தப் படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட ஆசிரி யைகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக் கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக் கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள் விகளுக்கு பதிலளிக்கும் போது பதில் ☞10

## வல்லைப் பாலத்தில் விழுந்த இளைஞர் காணாமல் போனார்

யாழ்ப்பாணம் வல்லைப் பாலத்தில் நேற்று மாலை மீன் பிடித்துக் கொண்டிருந்த இளை ஞர் ஒருவர் தவறி விழுந்து ☞10

## ஆசிரியர் மீதான தாக்குதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்க ஆளுநர் பணிப்பு!

பாடசாலக்குள் அத்துமீறிப் புகுந்து ஆசிரியரைத் தாக்கிய சம்ப வத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாகக் கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பெலிசாருக்கு வழிகாட்டல் பணிபுரை விடுத்திருக்கின்றார்.

ஆசிரியர் மீது பாடசாலையில் வைத்து தாக்குதல் ☞10

## ஆசிரியரைத் தாக்கிய மாணவனின் தகப்பன்

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் பிரதேசத்தில் உள்ள கல்லூரி ஒன்றிற்குள் நேற்று. அத்துமீறிப் புகுந்த மாண வனின் தந்தை ஒருவர் ஆசிரியர் மீது தாக்குதல் மேற் கொண்டதில் ஆசிரியர் காயமடைந்தார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:- பாடசாலை மலசல கூடத்திற்கு ☞10

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று முன்பக்கத் தலைப்புச் செய்தியில் உள்ளது. இன்னொரு பகுதியை இங்கு முதலில் தருகிறேன்.

"ரணிலின் இந்த அரசு உதட்டள வில்தான் விடயங்களைப் பேசுகின்றது. ஆனால் செய்கையிலே தலைகீழாக நடக் கின்றது.

ஊழல், மோசடிகளை ஒழிப்பேன் என்கிறார் ஜனாதிபதி. ஆனால் வெளி நாட்டு தூதுவர் ஒருவரிடம் லஞ்சம் கேட்டு, அதனால் அமைச்சர் பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்ட ஓர் அமைச் சரை அரசமைப்பு கவுன்ஸிலுக்குத் தனது பிரதிநிதியாக தேர்ந்தெடுத்து நியமிக் கின்றார் ஜனாதிபதி. அச்சுறுத்திப் பணம் பறித்த கிரிமினல் குற்றவாளியே இந்த அரசின் சிரேஷ்ட நாடாளுமன்றக் கொறடா. இத்தகைய அரசினால் எப்படி ஊழல், மோசடியை ஒழிக்க முடியும்? எவ் வாறு மோசடிகளை ஒழிப்பதாக சர்வதேச நாணய நிதியத்திற்கு உறுதி கொடுக்க முடியும்?

நீங்கள் ஒன்றைச் சொல்லுகின்றீர்கள். அதற்கு எதிரானதைச் செய்கின்றீர்கள்.

ஜனாதிபதி ஜெயவர்தனாவின் நடத்தை எப்படி என்பதை விளக்கும் ஒரு புத்தகத்தை வி.பி.விதாச்சி என்பவர் எழுதியிருந்தார். 'இலங்கை பிழைத்துப் போனது எப்படி?' என்பது நூலின் பெயர்.

விதாச்சியின் தகவலின்படி ஜனாதிபதி ஜெயவர்தனா 'நான் இந்தப் பாதையில் வலது பக்கம் செல்கிறேன், அதுதான் சரி யான பாதை, நான் இனி வலது புறம் திரும்புகிறேன்' என்பார். ஆனால் இடது புறம்திரும்புவார். இதுதான் ஜெயவர்தனா வின் செயற்போக்கு என்கிறார் வித்தாட்சி.

அந்த ஜெயவர்தனாவிடன் அரசியல் அரிச்சுவடி படித்து தெளிந்து வந்தவர் இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க. அவர் சொல்லிக் கொடுத்த அந்த முறைமையைத்தான் - ஒன்றைக் கூறி விட்டு இன்னொன்றை செய்கின்ற பாணி யைத்தான் - இப்போதைய ஜனாதிபதியும் கையாளுகின்றாரோ என்று தோன்று கின்றது.

நாங்கள் ஊழல், மோசடிகளைத் தடுக் கும் விதத்தில் அந்த விடயத்தைக் கையா ளுகின்றோம் என்கிறார். ஆனால் ஊழல், மோசடிகளை இல்லாமல் ஒழிப்பதற்குத் தலைகீழான வேலையைத்தான் அவர் செய்கிறார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கீடு 12 வீதம் அதிகரித்துள்ளது. இது மீண்டு வரும் செலவினத்துக்கோ அல்லது சம்ப ளத்துக்கோ அல்ல. நாட்டின் மற்றைய துறைகளுக்கெல்லாம் நிதி வெட்டு. எழு பது வீதமான மக்கள் தங்களின் ஒரு நேர உணவைத் துறந்துள்ளனர். ஐம்பதா யிரம் சிறார்கள் போஷாக்குக் குறைபாட் டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் நான் ஜனாதிபதியுடன் வவுனியாவில் விமானப்படைத் தளத்தில் மதிய உணவு அருந்தினேன். அந்த இடம், அதன் வசதிகள், மண்பாண்டங் கள், உணவு வகைகள் எல்லாம் கொழும் பின் ஏழு நட்சத்திர ஹோட்டல்களுக்குச் சற்றும் குறைந்தது அல்ல. அவர்களின் அந்த வசதி, வாய்ப்புகளில் யாரும் கை வைக்கவில்லை.

நீங்கள் இராணுவத்தை - படைகளை - மகிழ்ச்சியாக வைத்திருக்கவே விரும்பு கிறீர்கள். அவர்களை 'அப்செட்' பண்ண நீங்கள் விரும்பவில்லை. அதற்குக் கார ணம் உண்டு. அப்படி செய்தால்தான் அவர்களைக் கொண்டு உங்களை எதிர்ப்பவர்களை அடக்கலாம். ஆட்சேபிப் பவர்களை ஒடுக்கலாம்.

இப்படிச் செயற்படும் ஜனாதிபதியால் எப்படி நாட்டைப் பொருளாதார நெருக்கடி யில் இருந்து மீட்க முடியும்?"

- இவ்வாறு சுமந்திரன் நேற்று ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்கவை நாடாளு மன்றத்தில் பிய்த்துதறினார்.

"அவர் இனப் பிரச்சினைக்குத் தீர்வை விரைந்து தருவார் என்று கூறுகிறார். அதனால் அதற்கு இடமளித்து, அவரை எதிர்த்து நிலைமையைக் குழப்பாமல் இருப்பதற்காக அவரது வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்காமல் தவிர்க்கிறோம்" - என்று நேற்று தமது உரையில் சொன்னவர் சுமந்திரன்.

சரி .நீங்கள் எதிர்த்து வாக்களிக்க வில்லை. நல்லது. ஆனால் இப்படி ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்கவை நாடா ளுமன்றத்தில் போட்டுப் பிழித்துப் பிய்த்து தறி விட்டு, அவர் எங்களுடன் சேர்ந்து பேசி இணக்கத்தை ஏற்படுத்தி, சுமுகத் தீர்வைத்தருவார் என்று எப்படி சுமந்திரன் நம்புகின்றார்?

ஆண்டவனுக்கு தான் வெளிச்சம்...!

**- மின்னல் -**

## ரணிலின் 'பட்ஜெட்' .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஈ.பி.டி.பி., இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், முஸ்லிம் தேசியக் கூட்டணி உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையி லான ஐக்கிய மக்கள் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, டலஸ் அணி, விமல் அணி ஆகியவற்றின் உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் 10 நாடாளுமன்ற உறுப்பினர் களும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 2023 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு (வரவு - செலவுத் திட்ட உரை) நவம்பர் 14 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது.

நவம்பர் 15 ஆம் திகதி முதல் நேற்று (22) வரை 7 நாள்கள் ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றது.

இந்நிலையில், நேற்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பின் முடிவுகளின் அடிப்ப டையில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டது.

ஆளுங்கட்சி பக்கம் தாவுவார் எனக் கூறப்பட்ட ராஜித சேனாரத்ன வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித் தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பி னர் துமிந்த திஸாநாயக்க ஆதரவாக வாக்களித்தார்.

இன்று (23) முதல் குழுநிலை விவாதம் ஆரம்பமாகவுள்ளதுடன், சனிக் கிழமைகள் உள்ளடங்கலாக எதிர்வரும் டிசம்பர் 8 ஆம் திகதிவரை விவாதம் இடம்பெறும்.

டிசெம்பர் 8 ஆம் திகதி மாலை 5 மணிக்கு மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

## சபையில் பிள்ளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் சபையிலே இல்லாத போது என்னு டைய பெயரைப் பயன்படுத்தி என்னு டைய சக நாடாளுமன்ற உறுப்பினர் சிவ நேசத்துரை சந்திரகாந்தன் சில கருத்துக் களைச் சொல்லியிருந்தார். எனவே, அது குறித்த சில தெளிவுபடுத்தல்களை வழங்க விரும்புகின்றேன்.

எனக்கு என்னுடைய தாயும் தந்தை யும் வைத்த பெயர் சாணக்கியன் இரா குல் இராஜபுத்திரன் இராசமாணிக்கம். அது பற்றி சிவநேசத்துரை சந்திரகாந்த னுக்கு ஏதேனும் குழப்பம் இருந்தால் அவர் அதனைப் பற்றி பேசலாம்.

இரண்டாவதாக காணி அபகரிப்பு பற்றி என்னுடைய பெயரைப் பயன்படுத்தி ஒரு விடயத்தை அவர் சொல்லியிருந்தார்.

காணி அபகரிப்பு பற்றி ஏதேனும் இருந்தால் நான் ஜனாதிபதியிடம் கேட் கின்றேன். குழு ஒன்றை நியமித்து நான் என்னிடமுள்ள ஆவணங்களைக் கைய ளிக்கின்றேன். அதனை ஆராயுங்கள். அதேபோன்று சிவநேசத்துரை சந்திரகாந் தனுடைய ஆவணங்களையும் தருகின் றேன். அதனையும் நீங்கள் விசாரி யுங்கள்.

மூன்றாவதாக நான் கனடாவுக்கு ஆள்கடத்தலில் ஈடுபடுவதாக அவர் குறிப் பிட்டிருந்தார். கனடாவுக்கு விசா எடுத்து எப்படிப் போவது என்று தெரியாது என் பதை அவர் நிரூபித்துள்ளார். கனடாவுக்கு ஆள்களைக் கடத்தி காசு உழைக்க வேண் டிய அவசியம் எனக்கு இல்லை.

ஆனால், சிவநேசத்துரை சந்திரகாந் தனின் சகோதரர் என அழைக்கப்படும் அகிலகுமார் சந்திரகாந்தன் ஆஸ்திரேலி யாவுக்கு ஆள்களைக் கடத்துகின்றார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன - என்றார்.

## உள்ளூராட்சி தேர்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக் கும் நோக்கில் அவர்களுக்கு வாய்ப்பு களை வழங்குவதே இதன் நோக்கமா கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதன்படி, அரசாணைச் சட்டத்தில் தற் போதுள்ள பெண்களின் பிரதிநிதித்துவத் தைப் பாதுகாக்கும் வகையில், முதல் நியமனப் பத்திரத்தின்படி தேர்ந்தெடுக் கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை யில் 25 சதவீதத்துக்குக் குறையாமலும் இரண்டாவது நியமனப் பத்திரத்தின்படி தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர்க ளின் எண்ணிக்கையில் 25 வீதத்திற்கு குறையாத இளைஞர் பிரதிநிதிகளையும் நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தும் சட்ட மூலம் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தீர்வுக்கு வாய்ப்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப் பின் போது, நேற்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப் பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றிய போது, 21ஆவது திருத்தமானது இலங் கையின் சக்திவாய்ந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை மூலமான அத்துமீறல் களை தடுக்கும் என உறுதியளிக்கப்பட்ட மைக்கு மாறாக, ஜனாதிபதி தாம் விரும் பும் எத்தனை அமைச்சுப் பதவிகளையும் வகிக்க வழி செய்திருப்பதாகத் தெரிவித் தார்.

இலங்கையின் 21ஆவது அரசமைப் புத் திருத்தமானது, வாக்குறுதியளித்தபடி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதியின் எந்தவொரு அதிகாரத்தையும் பறிக்காத கண்துடைப்பு நடவடிக்கையா கும் என்றார் அவர்.

இந்தத் திருத்தம் வெறும் கண்துடைப் பாகும். அது உண்மையில் இந்த நாட்டில் எதையும் சுதந்திரமாக்கவில்லை. எந்த வொரு நிறைவேற்று அதிகாரத்தையும் ஜனாதிபதி பதவியிலிருந்து அது பறிக்க வில்லை என்றார் சுமந்திரன்.

நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாத ஜனாதிபதி நிதி அமைச்சுப் பொறுப்பை வகிப்பதைத் தாம் 2010 ஆம் ஆண்டு முதல் எதிர்க்கிறார் என அவர் தெரிவித் தார்.

இந்த சபையின் உறுப்பினராக இல் லாத ஒருவர் பட்ஜெட்டை தாக்கல் செய் யும்போது, அரசமைப்பு 148வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பொது நிதியின் முழுக் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்த சபை யின் திறனை அது தீவிரமாகக் குறைக்கி றது என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் அரசமைப்பின் 148 ஆவது பிரிவு பொது நிதியில் நாடாளு மன்றம் முழுக் கட்டுப்பாட்டைக் கொண் டிருக்க வேண்டும். நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தின் அல்லது ஏற்க னவே உள்ள சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் தவிர, எந்தவொரு உள்ளூர் அதிகார சபை அல்லது பிற பொது அதிகாரசபை யால் வரி, விகிதம் அல்லது வேறு எந்த வரியும் விதிக்கப்படாது." - எனக் கூறு கிறது:

21 ஆவது திருத்தம், 20வது திருத் தத்தை இல்லாமல் செய்து, மீண்டும் 19வது திருத்த நிலைமைக்குத் திரும்ப வழிசெய்யும் என்று கூறினார்கள். அது சுத்தப் பொய் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சை வைத்தி ருப்பது அம்பலப்படுத்துவதாக சுமந்திரன் கூறினார்.

"19வது திருத்தச் சட்டத்தின் கீழ் ஜனாதி பதியால் எந்தவொரு அமைச்சையும், பாதுகாப்பு அமைச்சைக் கூட வைத்தி ருக்க முடியாது. அந்த நேரத்தில் இருந்த அந்த ஜனாதிபதியின் பதவிக் காலத்திற்கு - அவருக்கு தனிப்பட்ட வசதியாக - மைத் திரிபால சிறிசேனவிற்கு, இடைக்கால ஏற் பாட்டில் மூன்று பெயரிடப்பட்ட அமைச்சுக் கள் அனுமதிக்கப்பட்டன. அதன் பின்னர் 19 ஆவது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதி யால் எந்த அமைச்சுக்களையும் வகிக்க முடியவில்லை. ஆனால் இப்போது ஜனா திபதி எத்தனை அமைச்சுக்களையும் வகிக்க முடியும். உண்மையில் அவரால் அனைத்து அமைச்சுக்களையும் தம் வசமே வைத்திருக்க முடியும் என சுமந் திரன் தெரிவித்தார்.

21வது திருத்தத்தின் மூலம் நிறை வேற்று அதிகாரங்கள் குறைக்கப்பட்டன, சிலசீர்திருத்தங்கள்மேற்கொள்ளப்பட்டன என்று கூறப்பட்ட பொய்யை நாட்டுக்கு அம்பலப்படுத்துவதற்கான மற்றொரு சந்தர்ப்பம் இதுவாகும். இல்லை, அப்படி எதுவும் செய்யப்படவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

"இந்தத் திருத்தத்தில் அரசமைப்புக் கவுன்ஸிலை மீண்டும் அமைப்பது பற் றிக் கூறப்படுவது ஒரு சாதகமான விடயம் தான். ஆனால் அதுவும் கூட ஓர் அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்புத் என்று நாங்கள் சுட்டிக்காட்டினோம். இது 17வது திருத்தத்தில் இருந்த கவுன்ஸில் அல்ல. இந்த சபையில் இருந்து அதிக மான உறுப்பினர்கள் அதில் உள்ளனர், அது அதை அரசியலாக்குகிறது. மற்ற வற்றுடன், சுயாதீன ஆணைக்குழுக் களை நியமிப்பதில் அந்த அரசியல் மயப் படுத்தப்பட்ட அமைப்பு கடமைப்பட்டுள் ளது" - என்று அவர் கூறினார்.

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜ பக்ஷ அமெரிக்காவிற்கு தனிப்பட்ட விஜ யம் மேற்கொண்டு இலங்கை திரும்பிய போது அவரை வரவேற்றார் எனக் கூறப் படும் பொலிஸ் ஆணைக்குழுவின் தலை வரின் நடவடிக்கை தொடர்பில் பரவலாக கேள்வி எழுப்பப்பட்டதாக சுமந்திரன் குறிப்பிட்டார்.

"கடந்த இரண்டு நாள்களில் இந்த சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் எவ்வாறு நடந்துகொண்டார் என்பதை நாங்கள் கண்டறிந்தோம். பெரிய அளவி லான ஊழல்களுக்காக இந்த நாட்டை விட்டு துரத்தப்பட்ட ஒருவரை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் வி.ஐ.பி. லவுஞ்சிற்கு சென்று வரவேற்ப தைத் பார்த்தோம். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவரைத் தவிர வேறு யார் அவரை வணங்கி வரவேற் கிறார்கள்? என்று சுமந்திரன் கேட்டார்.

"அதற்கு சில நாள்களுக்கு முன்னர், காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் ஒரு சிலர் மட்டுமே காணாமல் போயுள்ளனர் என்றும், அவர்கள் அனை வரும் வெளிநாட்டில் உள்ளனர் என்றும் கூறியமையை நாங்கள் கேட்டோம். அந்த அலுவலகமே காணாமல் போன வர்கள் குறித்து விசாரணை நடத்த உரு வாக்கப்பட்டது. அரசாங்க ஆணைக்குழுக் கள் - பல உள்ளன - அவை அனைத்தும் 20,000க்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர் என அறிக்கை அளித்துள் ளன. இது ஒரு பழமைவாத எண். ஆனால், இந்த சுயாதீன அலுவலகம் எனக் கூறப் படும் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட் டுள்ள அலுவலகத்தின் தலைவர் யாரும் காணாமல் போகவில்லை எனக் கூறுகி றார் என்றார் சுமந்திரன்.

நல்லிணக்க முயற்சிகளுக்கு அரசாங் கம் முன்னுரிமை அளிப்பதை ஆணைக் குழுவின் தலைவர் சரிவரப் புரிந்து கொள் ளவில்லை என அந்தக் கருத்துக்கு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ விளக்க மளித்தார் என சுமந்திரன் தெரிவித்தார்.

"இது மற்றொரு சிக்கலை உருவாக்கு கிறது. ஒரு சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் சுதந்திரமாக இருந்தால் அர சாங்கத்தின் முன்னுரிமைகள் என்ன என்பதை ஏன் அறிந்து கொள்ள வேண் டும்? அரசாங்கம் செய்ய விரும்புவதை அவர் ஏன் கடைப்பிடிக்க வேண்டும்? நாளை அதை செய்ய அரசாங்கம் விரும் பாமல் இருக்கலாம். அரசாங்கம் நாளுக்கு நாள் மனதை மாற்றிக் கொள்கிறது. ஆனால் இது ஒரு சுயாதீனமான அலுவல கம் என்றால், நாட்டில் இந்த பல்லாயிரக் கணக்கான காணாமல் போனவர்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆசியாவிலேயே முதற்பெண்கள் பாடசாலையான உடுவில் மகளிர் கல்லூரி 198 ஆவது வருடத்தில்!

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்திய பகுதியில் உள்ள உடுவில் கிராமமானது யாழ்ப்பாண பட்டினத்தில் இருந்து ஏறக் குறைய ஆறுமைல் தொலைவில் அமைந்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே சனச்செறிவு உடையதாகக் காணப்பட்ட இந்தக் கிராமத்தை சுற்றி வளம் கொழிக்கும் கிராமங்கள் வியாபித்துக் காணப்பட்டன.

வடக்கு கிழக்கில் சுன்னாகமும் வடமேற்கில் சண்டிலிப்பாயும் தெற்கில் சுதுமலையும், தென்கிழக்கில் இணுவிலும், தென்மேற்கில் மானிப்பாயும் சூழ்ந்து உடுவிலை உணர்ச்சிமிக்க இடமாக மெருகூட்டியுள்ளன.



இந்த உடுவில் எல்லோருடைய உதடுகளிலும் உச்சரிக்கவும் உச்சாடனம் செய்யவும் காரணமாக அமைந்தது உடுவில் மகளிர் கல்லூரியின் பிறப்பே ஆகும். இந்த பிறப்பிற்கு காரணம் என்னவென்று ஆராயும் போது அதிசயமும், ஆச்சரியமும் நிறைந்த வரலாறு இன்றைய சமூகத்தினருடனும் 198 வருடங்களாக மங்காப் புகழுடன் மார்பு தட்டி தலை நிமிர்ந்து பெண்களின் நிலையான இருப்புக்கு நிலை குழையாது தன்னிறைவான கல்வியையும், ஆற்றல்களையும் வளர்த்துக் கொண்டு வருவதுடன் அமுத சுரபி போல செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

உடுவில் மகளிர் கல்லூரியின் வரலாற்றை முன்னோக்கி பார்க்கும் போது வின்சிலோ தம்பதியினர் உடுவில் வீதியால் சென்று கொண்டிருக்கும் போது பாழடைந்த வீடும், தேவாலயமும், பூந்தோட்டமும் அவர்களைக் கவர்ந்து ஈர்த்தன. தாம் தேவ ஊழியம் செய்யவும் தமது செயற்பாடுகளை விசாலப்படுத்தவும் ஏற்ற இடமாக இதனைத் தெரிவு செய்தனர்.

இந்நிலையில் அமெரிக்க மிசனரிகள் தாம் தொண்டுசெய்ய வந்த சமூக அமைப்பை உற்று நோக்கினர். அதிலே ஏதோ குறையிருப்பதை அவதானித்தனர். அந்தக் காலத்தில் யாழ்ப்பாண பெண்கள் கல்வி என்றால் நினைக்க முடியாத ஒரு காரியமாக இருந்தது. ஆண்கள் மட்டுமே கல்வி கற்க வேண்டும். பெண்கள் வீட்டில் இருந்து கணவனையும் பிள்ளைகளையும் பராமரிக்க வேண்டும் என்ற முட்டாள் தனமான நிலை காணப்பட்டது.



இதனை எப்படியாவது மாற்றியமைக்க வேண்டும் என வின்சிலோ அம்மையார் தனது குறிக்கோளாகக் கருதி ஆண்டவரின் ஆசீர்வாதத்துடன் இலக்கு நோக்கி பயணிக்க ஆரம்பித்தார். அதற்காக கன்னி முயற்சியாக பழைய உடுவில் வீட்டை திருத்தி அதிலே திண்ணைப் பள்ளியை நடத்தத் தீர்மானித்தார்.

இதற்காகத் தன்னை வருத்தி, இரவு பகல் பாராது வீடு வீடாகச் சென்று சிறு பெண்களைப் படிக்க வரத் தூண்டினார். படிக்க வந்தால் நவீன உடுப்புக்களைத் தருவோம் என பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்குவதாக கூறியும் யாரும் படிப்பதற்கு வரவில்லை.

ஒரு நாள் இரண்டு பெண்பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருக்கும் போது இடியுடன் கூடிய மழை பொழிந்தமையால் மழைக்குஒதுங்குவதற்காகவின்ஸ்லோ அம்மையாரின் வீட்டில் ஒதுங்கிய போது விளையாட்டால் ஏற்பட்ட களைப் பின் காரணமாக இரண்டு பிள்ளைகளில் ஒரு பிள்ளை வின்ஸ்லோ அம்மையார் கொடுத்த உணவை உட்கொள்கிறாள்.

இந்த உணவின் மூலம் பெண் விடுதலை பெறப் போகிறார்கள் என்பதை உணவு உண்ட பெண்களும் உணரவில்லை. யாழ்.மாவட்ட பெண்களும் கனவில் கூட நினைக்கவில்லை. மாற்றம் என்பது இது தான் மங்கா புகழுடன் மார்தட்டி நிற்கும் உடுவில் மகளிர் கல்லூரியின் ஆரம்பமும் எழுச்சியும்.

மிகவும் கட்டுப்பாட்டுடன் சாதியும், மதமும் வேரூன்றி விருட்சமாக இருந்த சமூக கட்டமைப்பு உயிரை விட தன்மானத்தையே பெரிது எனக் கருதி இரண்டு பெண்களையும் தேடிய போது வின்ஸ்லோ அம்மையாரின் திண்ணைப் பள்ளியில் இருந்ததைக் கண்டு வீட்டுக்கு கூட்டிச் சென்றனர்.

அந்தப் பிள்ளைகள் இருவரும் உயர் குலமென வரையறுக்கப்பட்ட சைவ வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என அறிய முடிகின்றது. வீட்டுக்கு சென்றதும் மிஷனரிமாரின் உணவை உண்டதை அறிந்த பெண்களின் பெற்றோர்கள் அவர்களை அந்த இரவு தங்களின் வீட்டின் உள்ளே தங்க விடாது வின்ஸ்லோ அம்மையாரின் வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டு எங்கள் பெண்களை நீங்களே பொறுப்பேற்க வேண்டும். பிள்ளைகளை படிப்பித்து சீதனம் கொடுத்து ஏற்ற மணவாளனையும் தெரிந்தெடுத்து திருமணம் செய்து வைக்க வேண்டும் எனக் கூறிச் சென்று விட்டனர். அதனை மகிழ்ச்சியாகவும் தேவ கிருபையாக கருதி ஏற்றுக் கொண்டார் திருமதி வின்ஸ்லோ.

இவ்வாறு அர்ப்பணிப்புடன் தெற்காசியாவிலே முதல் பெண்கள் விடுதியுடன் அமைந்த பாடசாலையாக வித்திடப்பட்டது உடுவில் மகளிர் கல்லூரி. அந்த வித்து விருட்சமாக மாற வேண்டும் என்பதற்காக பெண் பிள்ளைகளைப் படிக்க அனுப்புமாறு உடுவிலில் உள்ள பெற்றோரிடம் மன்றாட்டமாகக் கெஞ்சிக் கேட்ட போது முதலில் மறுத்த பெற்றோர்கள் மேலும் மேலும் வருந்திக் கேட்க மனமிழகிக் கொண்டனர்.

நீங்கள் எங்கள் பிள்ளைகளை வீட்டுக்கு தனியே அனுப்பக் கூடாது எனவும் நீங்கள் உண்ணும் இறைச்சியை எமது பிள்ளைகளுக்குக் கொடுக்காது பழங்களை மட்டும் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். அதற்கு திருமதி வின்ஸ்லோ பூரண சம்மதம் தெரிவித்தார்.

திருமதி வின்ஸ்லோ அம்மையாரின் அன்பும் அரவணைப்பும், அறிவு பூர்வமான விடயங்களும், பிள்ளைகளில் ஏற்பட்ட நடத்தை மாற்றத்தையும் கண்டு பெற்றோர்கள் பிள்ளைகளை ஒருவரை ஒருவர் பார்த்து தனது பிள்ளையும் அறிவைப் பெற வேண்டும் என பிள்ளைகளை கொஞ்சம் கொஞ்சமாக அனுப்பத் தொடங்கினர். இது பல்கிப் பெருகி பெண்களின் நிலையான கல்விக் கொள்கையை கொழுந்து விட்டு எரியச் செய்தது. அதற்கு திருமதி வின்ஸ்லோ அம்மையாரின் நேரிய சிந்தனையும், நேர்மையான நோக்கங்களே ஆகும்.

பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக அதிகரிக்கத் தொடங்கியது. இதனை அவதானித்த அமெரிக்க மிஷன் சங்கத்தினர் 1823 ஆம் ஆண்டு உடுவிலில் பெண்கள் பாடசாலையை ஆரம்பிக்க அனுமதி வழங்கினர். 1824 ஆம் ஆண்டு வின்ஸ்லோ அம்மையாரின் கனவு நனவாகியது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை ஒவ்வொரு ஆண்டிலும் முன்னேற்றகரமான பரிணாமத்துடன் வளர்ச்சி கண்டு வந்த போதும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியைப் புகட்ட வேண்டுமென்ற புதிய சிந்தனை புனிதம் பெற்றது.

1914 ஆம் ஆண்டு சிரேஷ்ட கேம்பிறிஜ் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது என்பதில் இருந்து ஆங்கில பாடசாலையின் தரம் உயர்ந்துள்ளது என்பதை அறியலாம். 1915 ஆம் ஆண்டு பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டமை இந்தக் காலப்பகுதியின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். யாழ்ப்பாணப் பகுதியில் பெண் பிள்ளைகளுக்கு அமைக்கப்பட்ட முதலாவது பாலர் பாடசாலை இது ஆகும்.

இவ்வாறு பெண் பிள்ளைக்கு கல்வியை புகட்டியதுடன் மட்டுமல்லாமல் அவர்களின் ஆளுமையை வளர்ப்பதற்காக மேலைத்தேய இசை, கீழைத்தேச இசை, மனையியல் செயற்பாடு, ஆக்க செயற்பாடுகள், கைவேலை போன்றவற்றையும் நடைமுறைக்கு கொண்டு வந்து ஊக்குவித்தனர். இதற்காக கர்நாடக சங்கீதத்தை முழுமையாகப் பயின்று வருவதற்கு இந்தியாவுக்கு பயிற்சி பெற்று வருவதற்கு அனுப்பி எடுத்தனர்.

பாடசாலை என்றால் மாணவர்கள் கற்கக் கூடிய மகிழ்ச்சிகரமான சூழலாக இருக்க வேண்டுமென்பதற்காக பௌதீக சூழலை இயற்கையுடன் சங்கமிக்கும் வகையில் மரங்களை நாட்டி ரம்மியமான இடமாக மாற்றினர். உடுவில் மகளிர் கல்லூரி 2024 ஆம் ஆண்டு 200 ஆவது ஆண்டை தொடும் போது 200 மரங்கள் பாடசாலை வளாகத்தில் வரலாற்றை பேசும்.


மரங்களை நாட்டும் போது கூட எதிர்கால சமூகத்தினர் நன்மையடையக் கூடிய வகையிலும், பயன் பெறக் கூடிய வகையிலும் சுயநலமின்றி பொதுநலன் பேணினர் அமெரிக்க மிஷனரிமார்கள்.

உடுவில் மகளிர் கல்லூரி தனது 198 ஆண்டு கால வரலாற்றில் நான்கு அமெரிக்க மிசன் அதிபர்களையும் ஐந்து சுதேச அதிபர்களையும் கொண்டு இன்று வரை மிடுக்குடன் மிளிர்ந்து வருகின்றது. இதில் திருமதி ஹரியட் வின்ஸ்லோ, செல்வி எலைசா அக்னியு, செல்வி சூசன் ஹெலண்ட் செல்வி லூலு புக்வோல்டர் ஆகியோர் அமெரிக்க தேசத்தை சேர்ந்தவர்கள்.

சுதேச அதிபர்களாக செல்வி ஹட்சன் பரமசாமி, திருமதி சரஸ்வதி சோமசுந்தரம், செல்வி சிவி. செல்லையா, திருமதி சிராணி மில்ஸ், திருமதி பற்றிசியா சுனித்தா ஜெபரட்ணம் ஆகியோர் வரலாற்று தடத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர்கள்.

இலங்கையிலே பெண்களுக்கு தனித்துவம் மிக்க பாடசாலையாக இன்று வரை இயங்கி வருகின்றது. கல்வியில் மட்டுமல்லாது இணைபாடவிதான செயற்பாடுகள், மாணவர்களின் ஆற்றல்களை வளர்க்கும் நோக்கில் கழகங்கள், ஒழுக்கம் என்பன பொழிவிழக்காது பெண்கள் மத்தியில் பொங்கிக் கொண்டிருக்கின்றது.

இன்று 65 வீதமான பெண்கள் பல்கலைக்கழகங்கள், அரச உத்தியோகங்கள், அரச நிர்வாகங்கள், ஆசிரியர்கள் என ஆண்களை விட அதிகமாக ஆதிக்கம் செலுத்தக் காரணம் உடுவில் மகளிர் கல்லூரின் பிறப்பே என்று கூறுவதில் மிகையேதுமில்லை.



பெண்களின் பிறப்பிற்கே மகுடம் சூடிய உடுவில் மகளிர் கல்லூரி மிகவும் துன்பகரமான சூழலில் இருந்தே எழுச்சி பெற்றது. இதன் மகிமை, பெருமை சொல்லிலடங்காது. அப்படிப்பட்ட பாடசாலையில் கல்வி கற்று ஆண்களுக்கு நிகராக சமத்துவத்தைப் பெற்று தலை நிமிர்ந்து சமத்துவத்துடன் தன்மானத்துடன் வாழுகின்ற போதும் கல்லூரித் தாயின் நலன் காக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதில்லை.

அது மட்டுமல்லாமல் சமூக செயற்பாடுகளை முன்னிறுத்துவதிலும் பின்னிற்கிறார்கள். இது கல்லூரித் தாயை வெட்கி தலைகுனிய வைக்கிறது.

எனவே 200 ஆவது ஆண்டில் உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் ஒன்று திரண்டு கல்லூரியின் பெருமையைப் பறைசாற்ற அணிதிரள வேண்டும். அன்று கல்லூரி தாயின் துயர்துடைக்க திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

உடுவில் மகளிர் கல்லூரி பழம்பெரும் புகழ்பூத்த கல்லூரி தெற்காசியாவிலும் சரி ஆசியாவிலும், உலகத்திலும் உடுவில் மகளிர் கல்லூரியின் தடம் பதித்து வரும் பெண்கள் ஒவ்வொருவரும் கல்லூரியின் பெருமையையும் அதன் தற்சார்பு நிலையையும் மெருகூட்ட எழுச்சியுற வேண்டும்.

பழனித்துரை தர்மகுமாரன்.
ஆசிரியர்,
உடுவில் மகளிர் கல்லூரி.

**நமது பார்வை**

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

இணையம் - onlinekathir.com

# இப்போது இந்த வரவேற்புத் தேவையா?

**தமிழர் தாயகம் எங்கும் மாவீரர் வாரம் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படும் சமயம் இது. தம் இனத்துக்காகத் தம்முயிரைத் தற்கொடையாகத் தந்த பல்லாயிரம் மறவர்கள் மற்றும் பொதுமக்களை தமிழினம் போர்த் தோல்வியின் மனவேதனையில் துவண்ட நிலையில், தனக்குள் வெம்பி, துக்கித்து நினைவு கொள்ளும் சோக சமயம் இது.**

**தமிழர் தேசத்துக்கு அதன் உணர்ச்சிகள் கொப்பளிக்கும் வேதனைக் காலமும் இதுதான்.**

**இச்சமயத்தில் அவர்களின் உணர்வுகளைச் சீண்டிப் பார்க்கும் நிகழ்வுகளைத் தவிர்ப்பது நல்லது.**

**இவ்வேளையில் தியாகிகளின் நினைவேந்தல் சிந்தனையில், தியாகி திலீபன் நினைவுத் தூபி மையமும், அது அமைந்திருக்கும் நல்லூர் பதியும் கவிந்திருக்கையில், அருகில் பாகிஸ்தான் தூதுவரை யாழ். மேயர் மணிவண்ணன் வரவேற்கின்றமை நெஞ்சைச் சற்று நெருடுவதாக உள்ளது.**

**தமிழினத்திற்கு எதிராக சிங்களம் தொடுத்த போரில் பாகிஸ்தானின் பங்களிப்பு யாது என்பது வெட்ட வெளிச்சமானது.**

**அன்று மாவீரர்கள் அனைவரையும் மற்றும் அப்பாவித் தமிழர்களையும் கொவதற்குத் துணைபோன பிரதான சக்திகளின் தூதுவர்கள் – இராஜதந்திரிகள் – இந்தச் சமயத்தில் தமிழர் தேசத்துக்குள் சண்ட பிரசண்டம் பண்ணுவது பொருத்தமற்றது.**

**இனி, ஐந்து நாள்களுக்கு முன்னர் வெளியான ஒரு செய்தி இச்சமயத்தில் நோக்கற்பாலது. அதைப் பார்ப்போம்.**

**பாக்கிஸ்தானின் ஆயுத உற்பத்தியாளர் ஒருவர், விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தத்தின் போது தனது நிறுவனத்தின் ஆயுதங்களே சிறிலங்கா இராணுவத்தினருக்கு பெரிதும் உதவி, முக்கிய பங்களிப்பை வழங்கின எனத் தெரிவித்துள்ளார்.**

**பாகிஸ்தானின் கராச்சியில் இடம்பெற்ற சர்வதேச பாதுகாப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் கலந்து கொண்ட தனியார் ஆயுத உற்பத்தி நிறுவனமான டவ்ன் ஆர்மரி நிறுவனத்தின் பொதுமுகாமையாளர் இர்பான் அகமட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

**“எனது நிறுவனத்தின் கிரனைட் லோஞ்சர்கள் இலங்கையில் விடுதலைப் புலிகளிற்கு எதிரான யுத்தத்தை வெற்றிகொள்வதற்கு உதவின.**

**“எங்கள் இராணுவ தளபதி எங்கள் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியை அழைத்து இதற்காக நன்றி தெரிவித்தார்” எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

**– இதுதான் அந்தச் செய்தி.**

**பாகிஸ்தான் – இலங்கை ஆயுதப்படைகளின் உயர் மட்டப் பாதுகாப்புக் கலந்தாய்வு ஐந்து நாள்களுக்கு முன்னர் தான் கராச்சியில் இதே கண்காட்சியை ஒட்டிய சமயத்தில் அங்கு நடந்துள்ளது. அதற்கான பங்களிப்பை நல்கி கொண்டுதான் அந்நாட்டுத் தூதுவர் இங்கு ‘விசிட்’ அடிக்கிறார்.**

**தமிழர் தேசத்தின் கள நிலமை, மனநிலை, மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்புகள் போன்றவை புரியாமல் நமது பிரதேசத்திற்குச் சுற்றுலா வரும் பாகிஸ்தான், சீனா போன்ற இத்தகைய நாடுகளின் ராஜதந்திரிகள் குறித்தும் அவர்களின் பயண காலங்களின் சமய சந்தர்ப்பம் குறித்தும் அவர்களை வரவேற்கும் நமது அரசியல்வாதிகள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.**

# நாட்டின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்து சட்டமா அதிபர் ஆலோசனை கிடைக்கவில்லை!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எவ்வாறாயினும், சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் இந்த வாரத்துக்குள் கிடைக்கப்பெறும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சிமன்ற எல்லை நிர்ணய குழு நியமனத்துடன், உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையையும் பெற தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

எவ்வாறாயினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் திட்டமிட்ட திகதியில் நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில், அது தொடர்பான திகதி தொடர்பாக இதுவரையில் அறிவிக்கப்படவில்லை.

இது தொடர்பாக சட்டமா அதிபர் தனது கருத்தை தெரிவிக்காததால், உரிய அறிவுறுத்தல்கள் கிடைத்தவுடன் திகதிகள் அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# நாட்டில் சுமார் 56 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிப்பு!

## யுனிசெவ் தகவல்




இலங்கையில் சுமார் 56 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு உடனடி சிகிச்சை தேவைப்படுவதாகவும் யுனிசெவ்வின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இலங்கையில் 22 லட்சம் சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக வெளிநாட்டு வேலைகளுக்கு செல்லும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் இந்த வருடம் 286 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 48 லட்சம் சிறுவர்கள் கல்வி கற்க வேண்டும் என யுனிசெவ்வின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

62 லட்சம் மக்கள் மிதமான உணவுப் பாதுகாப்பின்றி உள்ளனர் என்றும் 66 ஆயிரம் பேர் கடுமையான உணவுப் பாதுகாப்பின்றி உள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து இலங்கை குடும்பங்களில் இரண்டு குடும்பங்கள் தமது மாத வருமானத்தில் 75 வீதத்தை உணவுக்காக செலவிடுகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பஸிலின் தலையீட்டால் பொதுஜன பெரமுன மீண்டும் ஆட்சிக்கு வருமென பலருக்கு பயம்!

## பொலிஸ் ஆணைக்குழு தலைவர் இப்படிக் கருத்து



முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் தலையீட்டால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீண்டும் ஆட்சிக்கு வரும் என்ற அச்சத்தால் சிலர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர் எனத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் பொலிஸ்மா அதிபருமான சந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடு திரும்பிய பஸில் ராஜபக்ஷவை வரவேற்க அவரும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மற்றுமொரு உறுப்பினரும் கட்டுநாயக்க விமான நிலை யத்திற்குச் சென்றிருந்தனர் என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியிருந்தன.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கும்போதே பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் சந்திர பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்தோடு, பஸில் ராஜபக்ஷவை தான் வரவேற்க கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு செல்லவில்லை என்றும் தான் அப்போது கட்டுநாயக்காவில் இருந்தார் எனவும் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் அந்த இடத்தில் என்ன நடக்கிறது என்பதை அறியவே அங்குச் சென்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அதன்போதே பஸில் ராஜபக்ஷவை தான் கண்டார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022**



“நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது. ”

**- இரவீந்திரநாத் தாகூர் -**

**(வங்கக் கவிஞர்)**

# 6 பொலிஸ் பிரிவுகளில் கணினிகள் உட்பட பல பொருள்களைத் திருடியவர் கைது!

கொழும்பு, நவ. 23

ஆறு பொலிஸ் பிரிவுகளில் உள்ள பல நிறுவனங்களுக்குள் நுழைந்து சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான மடிக்கணினிகள் உட்பட பல பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, 10 கணினிகள், 3 டெப்கள் மற்றும் 3 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தங்கக் கட்டி என்பனவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வலஸ்முல்ல பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடையவர் எனவும், சந்தேகநபர் நுகேகொடை பிரதேசத்தில் வாடகை வீடுகள் மற்றும் தங்கும் விடுதிகளில் தங்கியிருந்து இந்த திருட்டுகளை மேற்கொண்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ‘எழுத்தாளர் ஊக்குவிப்பு வட்டம்’ விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடைமுறைப்படுத்தும் ‘எழுத்தாளர் ஊக்குவிப்பு வட்டம்’ ஒன்றை உருவாக்கும் நோக்கில் எழுத்துத்துறையில் ஈடுபட்டு வரும் ஆர்வமுள்ள எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை தங்களது பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம்பெற்றுபூரணப்படுத்தப்பட்டவிண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 30.11.2022 ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர் என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

# இலங்கைப் பெண்களை ஓமானில் விபச்சாரத்தில் ஈடுபடுத்திய குற்றத்தில் மேலும் இருவர் கைது!

வேலை வாங்கித் தருகிறோம் எனக் கூறி, இலங்கையில் இருந்து பெண்களை சுற்றுலா விசாவில் வரவழைத்து ஓமானில் விபச்சார நடவடிக்கைகள் உள்ளிட்ட சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதாக கூறப்படும் ஆள் கடத்தல் சம்பவ வலையமைப்புடன் தொடர்புடைய மேலும் இருவரை சி.ஐ.டி. பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் செயற்படும் மனிதக் கடத்தல், கடத்தல்கள் தொடர்பான விசாரணை மற்றும் கடல்சார் குற்றவியல் புலனாய்வு பிரிவினர் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைது செய்தனர்.

பல்லேகலையைச் சேர்ந்த ஒருவரும், குருணாகல் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் கூறினர்.

பல்லேகலையைச் சேர்ந்த நபர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மனிதக் கடத்தல், கடத்தல்கள் தொடர்பான விசாரணை மற்றும் கடல்சார் குற்றவியல் புலனாய்வுப் பிரிவில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டார் எனவும் மற்றைய நபரை குருணாகலைக்கு சென்று கைது செய்து திரும்பியதாகவும் பொலிஸார் கூறினர்.

மேற்படி இரு சந்தேக நபர்களும் நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இதன் போது அந்த இருவரையும் எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதனிடையே, வேலை வாங்கித் தருகிறோம் எனக் கூறி , இலங்கையில் இருந்து பெண்களை சுற்றுலா விசாவில் வரவழைத்து ஓமானில் விபச்சார நடவடிக்கைகள் உள்ளிட்ட சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதாகக் கூறப்படும் ஆள் கடத்தல் சம்பவ வலையமைப்புடன் தொடர்புடைய, இலங்கையில் இருக்கும் பிரதான சந்தேக நபர்களில் ஒருவர் எனக் கூறி கைது செய்யப்பட்ட தம்புள்ளை பகுதியைச் சேர்ந்த ஆஷா திஸாநாயக்க எனும் பெண்ணை, கடந்த திங்கட்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிணையில் விடுவித்தது. 3 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் பெண்ணை விடுவிக்க கொழும்பு மேலதிக நீதிவான் கேமிந்த பெரேரா இதற்கான உத்தரவை பிறப்பித்து வழக்கை எதிர்வரும் டிசெம்பர் 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

வேலை வாங்கித் தருவதாக கூறி, இலங்கையில் இருந்து 6 பெண்களை ஓமானில் விபச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தினார் என மேற்படி பெண் மீது மனிதக் கடத்தல், கடத்தல்கள் தொடர்பான விசாரணை மற்றும் கடல்சார் குற்றவியல் புலனாய்வுப் பிரிவு குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும் மேற்படி குற்றச்சாட்டை அந்தப் பெண் மறுத்துள்ளார். அவருக்காக நேற்று மன்றில் ஆஜராகிய சட்டத்தரணி நிரோஷன் சிறிவர்தன தலைமையிலான சட்டத்தரணி சமந்த பிரேமசந்ர, பந்துல திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர் ஊடாக அவர் இதனை நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

இந்த பெண் 21 வருடங்களாக ஓமானில் ‘இன்டர் கிரேடட் ரூலர்’ எனும் நிறுவனத்தில் மொழி பெயர்ப்பாளராக சேவையாற்றியுள்ளார் எனவும், கடந்த 2019 ஆம் திகதி நாட்டுக்கு வந்து திரும்பியதும் கடந்த 2020 இல் அவர் சுகவீனம் அடைந்ததால் நாடு திரும்பினார் எனவும் சட்டத்தரணிகள் நீதிமன்றுக்கு தெரிவித்தனர். அவர் மீண்டும் ஓமானுக்கு செல்ல முயன்ற போதே அவருக்கு வெளிநாட்டுபயணத்தடை இருப்பது தெரியவந்ததாகவும் அதனையடுத்தே அவர் மனிதக் கடத்தல், கடத்தல்கள் தொடர்பான விசாரணை மற்றும் கடல்சார் குற்றவியல் புலனாய்வு பிரிவில் சரணடைந்தார் எனவும் சட்டத்தரணிகள் கூறினர். சந்தேக நபரான பெண் மேற்படி நிறுவனத்தில் மொழி பெயர்ப்பாளர் மட்டுமே எனத் தெரிவித்த சட்டத்தரணிகள் அதனை மையப்படுத்தி முன் வைத்த பிணைக் கோரிக்கையை ஏற்றே நீதிவான் அவருக்கு பிணையளித்துள்ளார்.

அதன்படி, இந்த ஆட்கடத்தல் விவகாரத்தில் இது வரை கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை 5 ஆகும். அவர்களில் நால்வர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், பெண் ஒருவர் மட்டும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நாட்டு மக்களுக்கான ஒருநாள் வாய்ப்புக்கள்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பொது மக்களுக்குச் சில விசேட வாய்ப்புக்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, சுதந்திர தினமான அடுத்த வருடம் பெப்ரவரி 4 ஆம் திகதி தேசிய பூங்காக்கள், தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொழுது போக்குப் பூங்காக்களை இலவசமாகப் பார்வையிட பொதுமக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விசேட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி நடைபெறவுள்ள 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, பொதுமக்கள் திரைப்படம் பார்க்கும் வாய்ப்பை வழங்கும் வகையில், நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளில் டிக்கெட் கட்டணத்தை 50 வீதத்தால் குறைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# புளியாவத்தை நகர் மாட்டிறைச்சி கடைக்கான அனுமதிகள் இரத்து!



புளியாவத்தை நகரில் மாட்டிறைச்சி கடைக் கான அனுமதியை நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் இரத்து செய்துள்ளார்.

புளியாவத்தை நகரில் மாட்டிறைச்சி வர்த்தக நிலையத்தை அமைப்பதை தடைசெய்யும் கோரிக்கையை பிரதேச மக்கள் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து புளியாவத்தை பகுதிக்கு சென்று பிரதேச மக்களுடன் கலந்துரையாடிய ஜீவன் தொண்டமான், நோர்வூட் பிரதேச சபை விடுத்துள்ள மாட்டிறைச்சி கடைக்கான ஒப்பந்த அறிவித்தலை நிறுத்தி ஒப்பந்தத்துக்காகப் பெறப்பட்ட 15 லட்சம் ரூபாவை உரியவரிடம் கையளிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

# இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தொடுத்த ஊழல் வழக்கில் அமைச்சர் கெஹலியவுக்கு பிணை!

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல்செய்யப்பட்ட ஜி.ஐ.குழாய் கொள்வனவு மற்றும் தவறான பயன்பாடு தொடர்பான வழக்கில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட இருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் வெளிநாடு செல்லத் தடை விதித்தது.

முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் தற்போதைய சுகாதாரத் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் செயற்பாட்டு பணிப்பாளர் சந்திரபால லியனகே மற்றும் முன்னாள் தலைவர் விமல் ரூபசிங்க ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இந்த விவகாரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 9 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பணத்தை செலவிட்டு, 600 ஜீ.ஐ. குழாய்களைக் கொள்வனவு செய்து அவற்றை வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தியதாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழு சட்டத்தின் 70 ஆம் அத்தியாயப் பிரகாரம் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட மூவரும் நேற்று (செவ்வாய்க்கிழமை) நீதிமன்றத்தில் ஆஜரானமையுடன், அவர்கள் முன்னிலையிலேயே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் பிரதிவாதிகள் மூவரும் தலா 20 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப்பிணை மற்றும் தலா 05 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ன மாரசிங்க அனுமதித்தார்.


மேலும் பிரதிவாதிகளின் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டதுடன், வழக்கு விசாரணை நிறைவடையும் வரை வெளிநாட்டு பயணம் மேற்கொள்ள தடை விதித்தும் நீதிபதி உத்தரவிட்டார். முதல் பிரதிவாதி அரச பயணமாக வெளிநாடு போக வேண்டி இருப்பின் அது தொடர்பாக மன்றைத் தெளிவுபடுத்துமாறும், அந்தச் சந்தர்ப்பத்தில் அந்த விடயங்களை ஆராய்ந்து அனுமதியளிப்பது தொடர்பாகப் பரிசீலிக்கப்



படும் எனவும் இதன்போது நீதிபதி குறிப்பிட்டார்.

பிரதிவாதிகளின் கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்ட மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முன் விளக்க மாநாட்டுக்காக எடுத்துக் கொள்வதாக அறிவித்தார்.





# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308


Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |




# பகவான் ஸ்ரீ சத்ய சாயி போதித்த சகோதரத்துவச் சிறப்பு அன்புதான்!

— எஸ் .என். உதயநாயகம் —
(பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் — கொழும்பு)

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா இன்றும் இன்னமும், வாழ்ந்து கொண்டு தானிருக்கிறார்.

நவம்பர் 23 ஆம் திகதி, புதன்கிழமை அவரது 97 ஆவது ஜனனதினம். உலகில் வாழும் கோடிக்கணக்கான சாயி பக்தர்களுக்கு அவர் சாட்சாத் தெய்வமே!

அவரிடத்தில் உலகிலுள்ள பக்தர்கள், இன்றும் ஆன்மீகத் தொடர்புடன்தானிருக்கிறார்கள். அவரும் பல லீலைகளைச் செய்துகொண்டுதானிருக்கிறார்.

உலகில் அவ்வப்போது ஞானிகளும், அவதாரப் புஷுருர்களும், மகான்களும் தோன்றுவதுண்டு. மானிட உருவில் வருவார்கள். இவர்கள் தங்களது பிறப்பின் ரகசியம்! எங்கே? எப்போது? தோன்றுவது என்பது மட்டுமல்ல, தங்களது வாழ்வின் இறுதி நாளையும் அறிந்து வைத்திருப்பார்கள். தாங்கள் அவதரித்த நோக்கம் நிறைவேறியதுடன் மீண்டும் தாங்கள் எங்கிருந்து வந்தார்களோ அந்த இடத்துக்கு மீண்டும் சென்று விடுவதுண்டு. சத்ய சாயி மார்க்கத்தில், இன்றைய நிலைமையில், பகவான் ஶ்ரீ சத்ய சாயி பாபா, தனது சமாதி நிலைக்குப் பின், சீரடியில் சங்கமித்துவிட்டாரோ? இன்று சீரடி சாயி பாபாவின் எழுச்சியையும் பக்தர்கள் கூட்டத்தையும் பார்க்கும் போது, இதுகூட உண்மையாக இருக்கலாம்.

பகவான் ஶ்ரீ சத்ய சாயி பாபா நமக்கு விட்டுச் சென்ற, பாரம்பரியத்தை புரிந்துகொண்டால், சோர்வடைந்த மனதுக்கு முழுத்தெளிவு கிடைக்கும்.

அந்தப் பாரம்பரியத்தில் ஒன்று அன்பாகும். சாயி அவதாரத்தின் தோற்றம் அன்பின் வடிவம். அவர் சாயி பக்தர்களின் இதயங்களில் அன்பினால் ஒளியை யேற்றினார் – அன்றாட வாழ்க்கையில். அந்த ஒளியானது, மற்றவர்களுடன் பரிமாறிக் கொள்ளத் தூண்டியது. சாயி சமுதாயத்தில் மாற்றம் ஏற்படச் செய்தது. லட்சக்கணக்கானவர்கள் பாபாவின் அன்பினால் உந்தப்பட்டதனால், உலகளாவிய நிலையில் 'செயல்படும் அன்பாக' அது ஆகியுள்ளது. அன்புதான் பகவானின் மிகப் பெரிய அருட்கொடையாகும்.

அவரது பாரம்பரியத்தில் முக்கியமானது, தன்னலமற்ற சேவை. இந்தச் சேவை புரிவதற்குத் தேவை, சாயி நிறுவனங்களின் பங்களிப்பு. சாயி நிறுவனங்களை, ஆன்மீகச் சாதனைகளுக்காக பகவான் ஏற்படுத்தினார். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தங்களது பதவி, அந்தஸ்து, கௌரவம் என்று பாராது, தாமே முன்வந்து, அன்போடும் பக்தியோடும் பணி செய்து வருகின்றனர்.

இந்த 'அன்பும்', 'சேவையும்' தான் சகோதரத்துவத்தை தோற்றுவிக்கிறது. அது மத வேற்றுமையை ஒழிக்கிறது. மதங்களிக்கிடையே ஒற்றுமையை உருவாக்கிறது. சாதி, மொழி, இன வேறுபாடுகளை அழிக்கிறது. இது சாயி மார்க்கத்தின் சிறப்பு. அந்த சகோதரத்துவத்தை இரண்டு இடங்களில் பார்க்கலாம். ஒன்று – கல்விக்கூடம் மற்றது – மருத்துவ பீடம். இவை இரண்டுக்கும், பகவான் எப்போதும் முக்கியத்துவம் கொடுப்பார். அதற்கு அத்தாட்சி, அவரது பல்கலைக்கழகங்களும், பிரமாண்டமான வைத்தியசாலைகளும் ஆகும்.

பகவானின் இந்த முக்கியத்துவத்தை, கொழும்பு ஶ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் தனது கொள்கையாக கடைப்பிடித்து வருகிறது. இந்த இரண்டு இடங்களில் இன, மத மொழி மக்களைக் காணமுடியும். இங்கு செய்யப்படும் சேவைகள் சகோதரத்துவத்தை ஏற்படுத்தும்.

அதனால்தான் யாழ் பூநகரி வைத்தியசாலைக்கு வழங்கிய தண்ணீர் திட்டம், வத்தளை ஹெந்தலை கந்தானை வைத்தியசாலைகளுக்கு வழங்கிய சத்திர சிகிச்சை நாற்காலிகள் மற்றும் அறுவை சிகிச்சைக்கான கட்டில்கள், கட்டில் விரிப்புகள், தலையணை உறைகள், மருத்துவ உபகரணங்கள் என்பன ஒரு சாயி சேவையாக செய்யமுடிந்தது. அது போன்று பல பாடசாலைகளுக்கு மற்றும் கல்வி கற்கும் மாணாக்கர்களுக்கு உதவிகளும் செய்து வந்துள்ளது. மகரகம புற்றுநோயாளர்களுக்கும், ஹெந்தலை தொழுநோயாளர்களுக்கும் உதவிகள், அத்துடன் பிரித்திபுர அனாதரவற்ற குழந்தைகளுக்கு அன்னதானங்களும் தன்னலமற்ற சேவையாக செய்து வருகிறது. இந்த வருடம் பகவானின் 97 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, கடந்த வாரம் சாயிநிலையத்தில் வைத்து 100 பேருக்கு மேல் இலவச கண் சிகிச்சை முகாம் செய்யப்பட்டு, 97 பேருக்கு கண்ணாடி வழங்கப்பட்டது. நேற்று நவம்பர் 22 ஆம் திகதியன்று காலை, கொழும்பு வடக்கு, மகா வித்தியாலய மாவத்தையிலுள்ள, கொழும்பு மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபரின் வேண்டுகோளின்படி, பாடசாலை மண்டபமொன்று புதுப்பித்து புனரமைத்து கையளிக்கப்பட்டது. அத்துடன் கந்தானை பிரதேச மருத்துவமனையின் வைத்திய அதிகாரிகளின் வேண்டுகோளின் காரணமாக, மகளிர் நீரழிவு நோய் பிரிவுக்கு, ஒரு நவீனவசதியுடன் கூடிய மலசலகூடமொன்று கட்டிக் கொடுக்கப்படவுள்ளது.

பகவான் ஶ்ரீ சத்ய சாயி பாபா மத்திய (கொழும்பு) நிலையம் ஏற்பாட்டில், கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயி நிலையத்தில், பாபாவின் பிறந்தநாள் முன்னோட்டமாக, நேற்று செவ்வாய்க்கிழமை, மாலை 5 மணிக்கு, பாபாவின் ஐம்பொன் திருவுருவச்சிலைக்கு அபிகேம் செய்யப்பட்டு, சித்திரத்தேர் பவனி இடம்பெற்றது.

இன்று நவம்பர் 23 ஆம் திகதி, புதன்கிழமை, பகவான் ஶ்ரீ சத்ய சாயி பாபாவின் 97 ஆவது பிறந்தநாளன்று, பிரசாந்தி கொடி ஏற்றத்துடன் அனைத்து நிகழ்வுகளும் காலை 5 மணி தொடக்கம் பகல் ஆராத்தி வரை அன்னதானத்துடன் நடைபெறவுள்ளது. சிறப்பு அம்சமாக பிறந்தநாள் கேக் வெட்டுதல், திருவூஞ்சல், திரிமங்களாராத்தியும் இடம்பெறும்.

# சத்ய சாயி மத்திய நிலையத்தின் நேற்றைய கல்வித் துறைப் பணி







மத்திய கொழும்பு இந்து மகா வித்தியாலயம் அதிபர் பி. பத்மரஞ்சனின் வேண்டுகோளின் பேரில் பாடசாலையில் அமைந்துள்ள 2ஆம் மாடிக் கட்டடத் தொகுதியை சீரமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்து முடித்த கொழும்பு புதுச்செட்டித் தெரு ஶ்ரீ சத்ய சாயி, சீரடி சாயி மத்திய நிலையத்தின் தலைவர் எஸ். என். உதயநாயகம் மற்றும் அறங்காவலர் சபையினர் நேற்றுக்காலை வைபவ ரீதியாக திறந்து வைத்து அதிபரிடம் கையளித்து சத்துணவும் மாணவர்களுக்கு வழங்கி வைத்தனர்.

நிகழ்வில் பெயர் பலகையை திரை நீக்கம் செய்து, நாடாவினை வெட்டி வைபவ ரீதியாக திறந்து வைப்பதையும், மாணவர்களுக்கான சத்துணவை வழங்குவதையும் காணலாம்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## குத்துச்சண்டையின் பாவனைகளில் அரசியல்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 189

மாவீரர் வாரத்தில் பொருத்தமான ஆபிரகாம் லிங்கனினது உரையைச் சுட்டிக் காட்டினேன் எனப் பல வாசக நண்பர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். அவர்களது அபிப்பிராயங்களில், கிட்டிய காலங்களில் மாவீரர் தின நிகழ்வுகள், திவசங்கள் போன்று, பிதிர் கடன்களை முடித்துவிட்டு, பசியாறலாம் என்பது போல இலட்சிய முன்னெடுப்புகள் இன்றி, அர்ப்பணங்களை நினைவுகூராது, அவர்களது அர்ப்பணிப்புகளும் இல்லாமல், வடிவங்களும் கோலங்களும் பிரதானமாகி, தமிழ் அரசியல்வாதிகள் கட்சிகளின் அரசியலுக்காகவே முனைப்பெடுகிறார்கள் என்பதும் அவர்களது ஆதங்கங்களாக இருந்தன.

அதேசமயம் சில நண்பர்கள் மாவீரர்கள் விட்டுச் சென்ற அவர்களது உன்னதமான இலட்சியங்களுக்காக, அவர்கள் விட்டுச் சென்ற மிகுதங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதே உயிருடன் இருந்து அவர்களை நினைவுகூர்பவர்களின் அர்ப்பணிப்பும் கடமையும் என உத்வேகம் தந்தால், இவ்வளவு அழிவுகளுக்குப் பிறகும் இன்னும் தமிழீழம் நோக்கிதான், அந்த லட்சியங்களுக்காகப் பயணிப்பதா என வினவினார்கள். இவை பழையபடி உணர்ச்சிகளை கிளறுவதே ஒழிய, மக்களுக்கு நிம்மதியான இயல்புவாழ்வு நிலைகளுக்கு திரும்புவதற்கு கொண்டு செல்லும் வழிகள் அல்ல எனவும் கடிந்து கொண்டார்கள்.

இவை இரண்டுமே என்னை மீறியவை. நான் அரசியலிலும் இல்லை. தலைமைத்துவத்துக்குப் போட்டியிடுபவனும் அல்லன். ஆகவே தமிழ் மக்களின் பார்வைகளுக்காக அந்த அபிப்பிராயங்களை பதிந்துள்ளேன். அதில் அப்பகுதிக்கான தீர்வுகளும் இல்லை. தமிழர் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மாவீரர் உரைகளை ஆற்றுவதில்லை. நினைவு கூரல்களில் பங்கு பற்றியமை குறைவு. அதன் பேச்சாளர் சுமந்திரன் தான் வன்முறையை ஆதரிக்காதவனாதலால் இவற்றைக் கண்டு கொள்வதில்லை என்று எண்ணப்பாடு. கூட்டமைப்பின் அரசியலில் அது ஓர் அங்கம். அதைப்போல் ஜனநாயகக் கொள்கைப்பாடல் கூட்டமைப்பினர் இடையே பல அர்த்தங்கள். அவர்கள் மாவீரர் தினங்களை நினைவுகூருகிறார்கள். அதனால் மாவீரர் விட்டுச் சென்ற உன்னதமான இலட்சியங்களின் மிகுந்தங்களை யார் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துச் செல்வார்கள் என்பதிலேயே பெரிய கேள்விகள் எழுகின்றன. இதுதான் தமிழர்களுடைய பரிதாப நிலையும். அதற்கு அவர்களைக் கொண்டு வந்து விட்ட அவர்களின் தலைமைகளையும் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.



அப்படி அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அண்மையில் கொழும்பில் நடைபெற்ற மணவைத் தம்பியின் புதல்வர் மணவை அசோகனின் மணிவிழாவில் கலந்து கொண்டு தான் சொன்ன கருத்தை தனது முகநூலிலும் மனோ கணேசன் பதிவு செய்திருந்ததை ‘ஈழநாட்டில்’ இப்படியும் நடக்கிறது – என்ற பகுதி அப்படியே பிரசுரித்து இருந்தது. அந்தப் பதிவை நான் திரும்பத் திரும்ப தமிழ் மக்கள் தங்களை சுயநிர்ணயம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆணித்தரத்தை வலியுறுத்த அப்படியே ஈழநாட்டிற்கு நன்றியுடன் பதிவிடுகிறேன். அது வருமாறு:–

*இன்றைய இந்தப் பத்தியை நான் எழுதப் போவதில்லை. எழுதப்போகின்றவர் உங்கள் எங்கள் எல்லோருக்கும் நன்கு தெரிந்த ஒருவர்.*

*உங்களில் பலர் இதனைப் படித்தும் இருக்கலாம். ஆனாலும் இது ஒரு பதிவாக இந்தப் பத்தியில் வரவேண்டும் என்று இந்த ஊர்க்குருவி விரும்பியதால் இங்கே மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது.*

*அண்மையில் கொழும்பில் நடைபெற்ற மணவைத்தம்பியின் புதல்வர் மணவை அசோகனின் மணிவிழாவில் கலந்து கொண்டு தான் சொன்ன கருத்தை அவர் தனது முகநூலில் பதிவுசெய்திருந்தார். அதனை இங்கே அப்படியே தருகின்றேன்.*

*‘சும்மா கலைஞர் கருணாநிதியைக் கரித்து கொட்டுவதை நிறுத்துங்கள்! இலங்கையில் தமிழர்களின் எல்லா இழப்புகளுக்கும், தமிழக அரசியல்வாதிகளையும், இந்திய தலைவர்களையும் காரணமாக காட்டுவதை நிறுத்துங்கள்!!*

*இலங்கையில் தமிழர்கள் கண்டு விட்ட இழப்புகளுக்கு முதற்காரணம், இலங்கை தமிழ் அரசியல் மேதைகள். இரண்டாவது காரணம், கொலைகார சிங்கள பேரினவாத அரசுகள்.*

*1940களில் கண்டிய சிங்கள தலைமைகளே தர வந்த சமஷ்டியை எட்டி உதைத்து யார்?*

*65:35 என்ற ஜன பரம்பலுக்கு, நியாயமேயற்ற 50:50 என்ற கோதாரி கோரிக்கையை முன் வைத்து, பிரிட்டிஷ்காரனே கைவிரிக்கும் நிலைமையை ஏற்படுத்தியது யார்?*

*1987ல் வடக்கு கிழக்கு மாநிலம் என்ற அடிப்படையை ஆரம்பித்து வைத்த, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை, மாகாண சபைகளை எட்டி உதைத்தது யார்?*

*இன்று, ’பிச்சை வேண்டாம், நாயை பிடி!’ என்று, 13ஐ யாவது முழுமையாக அமுல் செய்யுங்களேன் என ஓலமிடுவது யார்?*

*இந்திய நாட்டு பிரதமராக இருந்த, இருக்கவிருந்த, ராஜீவையே போட்டு தள்ளி விட்டு, இப்போது இந்திய அரசு தலைவர்களிடம், அதிகாரிகளிடம் கோரிக்கை மேல் கோரிக்கை வைப்பது யார்?*

*இன்றும்கூட சகோதர முஸ்லிம் மக்களின் தேசிய அபிலாஷைகளை உள்வாங்காமல், வடக்கு – கிழக்கு இணைப்பு என நிபந்தனை விதிப்பது யார்?*

*கருணாநிதியும், இந்திய தலைவர்களும் அதி உத்தமர்கள் என நான் கூற வரவில்லை. கருணாநிதியை கருணைநிதி என நான் கூறவில்லை. ராஜீவ் காந்தியை மகாத்மா காந்தி என நான் கூற வரவில்லை.*

*ராஜிவ் அனுப்பி வைத்த ஐபிகேஎவ் இங்கே கொலைகள், பாதகங்கள் செய்யவே இல்லை என நான் கூற வரவில்லை.*

*ஆனால் தமது ‘தேச நலன்கள்’ அவரவருக்கு முக்கியம் என்பதும், இந்தியர்கள் எமக்காக வரக்கூடிய தொடுவானம் எதுவரை என்பதும், நமது அரசியல் மேதைகளுக்கு விளங்கி இருந்திருக்க வேண்டும்*

*கருணாநிதியோ, ஜெயலலிதாவோ, எம்ஜியாரோ, இன்று ஸ்டாலினோ, தமக்கு வாக்களித்து ஆட்சியில் அமர்த்தும் எட்டு கோடி தமிழருக்குதான் முதலில் பொறுப்புகூற கடமைபட்டுள்ளார்கள்.*

*இதிலும்கூட, கருணாநிதி இலங்கை தமிழருக்காக இரண்டு முறை தனது ஆட்சியை இழந்தார் என்பது இங்கே எத்தனை மேதைகளுக்கு ஞாபகம் இருக்கிறது?*

*ஆகவே, சும்மா கலைஞர் கருணாநிதியை கரித்து கொட்டுவதை நிறுத்துங்கள்! முதலில் சுய விமர்சனம் செய்ய ஆரம்பியுங்கள்! விடை கிடைக்கும்!!*

*நான் சும்மா ஊருக்கு உபதேசம் செய்யவில்லை. அனுபவத்தை பகிர்கிறேன். எனக்கு பின்னடைவு ஏற்பட்டால், காரணத்தை எனக்குள்ளேதான் நான் தேடுகிறேன். வரலாறு எனக்கு இதை கற்று கொடுத்திருக்கின்றது. ஆகவே விடை கிடைக்கிறது.’*

*இதுவே அந்த தலைவர் ஆற்றிய உரை. இந்த உரையை ஆற்றக்கூடிய துணிவும், நெஞ்சுரமும் யாருக்கு இருக்கும் என்று தெரிந்தவர்களுக்கு அவர் பெயரைக் குறிப்பிடவேண்டும் என்பதல்ல.*

*ஆனாலும், தெரியாதவர்களுக்காக, இந்த வரிகளுக்கு சொந்தக்காரர், மனோ கணேசன் மட்டுமே.!*

*– ஊர்க்குருவி*

– இதுதான் அந்தப் பதிவு.

வவுனியாவிற்கு வந்த ஜனாதிபதி ரணிலுக்கு சமஷ்டி என தமிழ் மக்கள் கோரியதும், அதன் அடிப்படைகளில் தீர்வு என்பவற்றையும் நினைவூட்டியமையும் செய்திகள். தனது மூதாதையர் ஜனாதிபதி ஜே.ஆரின் கீழ் அரசியல் தொழில் பயிற்சி பெற்றவர் ரணில். ஜனாதிபதி ஜே.ஆர். தான் பள்ளிக்கூட காலங்களில் குத்துச்சண்டை வீரன் ஆவதற்கு பயிற்சி எடுத்தார் எனவும், அந்தப் பயிற்சிகளில் இருந்து தான் கற்றுக் கொண்டது எதிரிக்கு முகத்தில் குத்துவது போல் பாசாங்கு செய்து கொண்டு, மார்பிலோ அல்லது வயிற்றுக்கு மேலேயோ குத்துவதற்கு ஆயத்தம் செய்வதுதான் எனவும், அதனை அரசியலில் பலமுறை பாவித்துள்ளேன் எனவும் பெருமையுடன் பேட்டிகளில் தெரிவிப்பார்.

அதேபோல் ஜனாதிபதி ரணில் நாடாளுமன்றத்தில் எல்லா மக்களும் ஏற்றுக் கொள்கின்ற தீர்வைதான் அடுத்து வருகின்ற சுதந்திர தினத்துக்கு முன் தருவேன் என்றும், அதற்காக வடபகுதி அரசியல் தரப்புகளோடு பேச இருக்கிறேன் எனவும் அறிவித்து, அதனை அடுத்து தமிழ் பரப்புகள் வாழை இலைகள் விரிக்க, அவர் வவுனியா வந்து, வடபகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு ஜனாதிபதியின் பணியகத்தில் நிறுவப்பட்டுள்ள கட்டமைப்பின் வவுனியா கிளையை அங்குரார்ப்பணம் செய்து திரும்பினார். வவுனியாவில் சமஷ்டியை பற்றி பல பேச்சுக்களின் அழுத்தங்கள் இருந்தும், எந்த வடிவத்திலான தீர்வை மனதில் கொண்டுள்ளார் என்பதை தெரிவிக்காது, கொழும்பு திரும்பியதும் ‘தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து வந்தால் பேச்சு நடத்த நான் ரெடி!’ என்று சர்வசாதாரணமாக ஊடகவியலாளர் கேள்விக்கு பதில் அளித்தார். தமிழ் அரசியல் தரப்புகள் இணைந்து வரப்போவது உடனடியான சாத்தியம் இல்லை என்பது அவர் அறிந்ததுதான்.

(வளரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir

## தீர்வுக்கு வாய்ப்பு .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து விசாரிக்க சட்டத்தின் மூலம் அவர் பணிக்கப்பட்டுள்ளார்.

அவர் சுயாதீனமாக இயங்க வேண்டும். அரசாங்கத்தின் விருப்பை உள்வாங்கியல்ல." - என்றார் சுமந்திரன்.

இந்த வரவு - செலவு திட்டத்தை தமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பதற்கு பல காரணங்கள் உள்ளன என்று குறிப்பிட்டு அவற்றை அவர் விவரித்தார்.

பாதுகாப்புச் செலவினங்களுக்குப் பெருந்தொகை நிதி ஒதுக்கீடு, ஊழியர் சேமலாப நிதியில் பெருமளவு ஊழல் மோசடி, முறைகேடுகள் எனப்பல விடயங்களை விவரமாக அவர் பட்டியலிட்டார்.

"இந்தக் காரணங்களுக்காக நாம் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) இந்த வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்க வேண்டும். ஆனால் ஒரே ஒரு காரணத்துக்காக இதை எதிர்த்து வாக்களிப்பதில்லை என நாம் முடிவு எடுத்துள்ளோம்.

"நீண்ட காலமான தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுப்பார் என்று ஜனாதிபதி கடந்த சில நாள்களாகத் திரும்பத் திரும்பக் கூறி வருகிறார். அந்தக் கூற்று குறித்து நாங்கள் அவநம்பிக்கை கொண்டாலும், அவரை நாங்கள் நம்பாவிட்டாலும், இந்தப் பிரச்சினையை பேசி தீர்க்க போகிறேன் என்று கூறும் ஜனாதிபதிக்கு எதிர்ப்பு காட்டிக் குழப்பினோம் என்ற குற்றச்சாட்டு எங்கள் மீது வரக்கூடாது என்பதற்காக இந்த வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக எங்கள் வாக்கை அளித்து எதிர்ப்பைக் காட்டும் நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ளக் கூடாது என்று தீர்மானித்திருக்கிறோம். - என்றார் சுமந்திரன்

## பாடசாலைச் சீருடை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து பாணந்துறை கடற்கரையில் விசேட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனஒ பொலிஸார் தெரிவித்தனர்.

தவணைப் பரீட்சை முடிவடைந்ததையடுத்து, பாணந்துறை மதுபானக் கடையில் இவர்கள் பியர் கொள்வனவு செய்துள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் பெற்றோரை வரவழைத்து அறிவுரைகள் வழங்கிய பின்னர் அவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## சேலையின்றி மாற்றுடை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகத்துறை அமைச்சர் நந்த பண்டார இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் ஆடைகளில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதை அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த பகிரங்கமாகவே அறிவித்துள்ளார்.

பாடசாலை கட்டமைப்பு என்பது எமது நாட்டின் எதிர்காலமாகும். ஆசிரியைகளுக்கு சேலை அணியும் கலாசாரத்தை சீரழிக்க வேண்டும் என்பது சில அரச சார்பற்ற அமைப்புக்களின் தேவையாகவுள்ளது. அவர்களது தேவைக்காக பாடசாலை கட்டமைப்பை சீரழிக்க ஒரு போதும் இடமளிக்க முடியாது.

இது தொடர்பில் அரசாங்க மட்டத்தில் கலந்துரையாடப்படும். அந்த கலந்துரையாடல்களுக்கமைய கல்வி அமைச்சினால் , வழமைக்கு மாறான ஆடை அணிந்து , அந்தப் படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றிய ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இது தொடர்பில் நீதி அமைச்சர் விஜேதாசராஜபக்ஷ கருத்து வெளியிடுகையில்,

ஆசிரியைகளின் ஆடை தொடர்பில் எழுந்த சர்ச்சையின் போது கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெளிவான இறுதி தீர்மானத்தை அறிவித்துள்ளார். அதற்கமைய ஆசிரியர்களின் ஆடைகளில் எவ்வித மாற்றங்களுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. நாட்டின் கலாசார தனித்துவத்தன்மையை பாதுகாக்கும்வகையிலேயே அவர்களுக்கான ஆடைகளும் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

தற்போது எமது நாட்டு கலாசாரத்தை சீரழிக்கும் வகையில் பல்வேறு தரப்புக் கள்செயற்பட்டுவருகின்றன. இவ்வாறானவர்களே பாடசாலைகளுக்கு சென்று, இலவசமாக போதைப் பொருள்களைப் விநியோகிக்கின்றனர். எதிர்கால சந்ததியினரைஇலக்குவைத்துமுன்னெடுக்கப்படும் இதுபோன்ற செயற்பாடுகளுக்கு வெளிநாடுகளிலிருந்தும் பணம் அனுப்பப்படுகிறது.

கலாசார சீரழிவுகளை ஏற்படுத்தி , நாட்டில் அசௌகரியமான சூழலை ஏற்படுத்துவது மிக இலகுவானதாகும். எனவே இதற்காக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களை முதலில் நாட்டின் கலாசாரம் தொடர்பில் கற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். - என்றார்.

இதற்கிடையில் -

அரச அலுவலகங்களில் எளிதான மற்றும் கண்ணியமான உடையில் பணிக்கு வரலாம் என வெளியிடப்பட்டுள்ள ஆடைக் கட்டுப்பாடு சுற்றறிக்கை பாடசாலை ஆசிரியர்களுக்குப் பொருந்தாது என பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தச் சுற்றறிக்கை குறித்து பல தரப்பினர் பகிர்ந்துள்ள கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில், அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே இதைத் தெரிவித்தார்.

மேலும் பாடசாலைக் ஆசிரியர்கள், ஆடைகளை அணிவது குறித்து கல்வி அமைச்சு தனது முடிவை அறிவிக்க வேண்டும். இந்த சுற்றறிக்கை அலுவலக ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும் என தெளிவாக கூறப்பட்டுள்ளது.

## ஆசிரியரைத் தாக்கிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வதாகக் கூறிச் சென்ற மாணவன் நீண்ட நேரமாகியும் வராததால், மாணவனை தேடி குறித்த ஆசிரியர் சென்றுள்ளார்.

அங்கு மாணவன் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்பட்டமையால் மாணவனை ஆசிரியர் விசாரித்த போது மாணவன் அங்கிருந்து, மதில் பாய்ந்து தப்பி சென்று, தனது தந்தையாரை அழைத்துக்கொண்டு பாடசாலைக்கு வந்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்த மாணவனின் தந்தை, ஆசிரியர்களின் ஓய்வறையில் இருந்த அந்த ஆசிரியர் மீது சரமாரியாக தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த ஆசிரியரை சக ஆசிரியர் அங்கிருந்து மீட்டு , வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ஆசிரியர் மீதான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியதில் ஆசிரியரின் மண்டை உடைந்து இரத்தம் வெளியேறியது.

குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு தகவல் சென்ற நிலையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைதுசெய்யுமாறு ஆளுநர் பொலிஸாரை வழிப்படுத்தியிருக்கின்றார்.

## 'றோ' தலைவரே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு வந்து சென்றுள்ளார் எனக் நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பில் அவர் ஜனாதிபதி ரணிலை சந்தித்து முக்கிய பேச்சுகளை நடத்தியிருக்கிறார் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் கொழும்பு வந்து திரும்பினார் என்ற தகவல் தவறு என்றும், 'றோ' அமைப்பின் தலைமை நிர்வாகி சமந்த் கோயலே கொழும்பு வந்து திரும்பினார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

'றோ' இந்தியாவின் நலனைக் கருத்தில் கொண்டு, வெளிநாடுகளில் இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிராக நடக்கும் சதிசெயல்களை கண்காணிப்பதற்கும், தடைசெய்யவும், சதிகாரர்களை கண்டறிந்து கைது செய்தற்குமான புலனாய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்பாகும்.

முன்னர் இந்திய உளவு அமைப்பு உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் உளவுப் பணி மேற்கொண்டிருந்தது. 1968 முதல் புதிதாக தொடங்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு அமைப்பு வெளிநாடுகளில் மட்டும் தனது உளவுப் பணியை மேற்கொள்கிறது. இதன் தற்போதைய தலைவர் சமந்த் கோயல் ஆவார். இந்திய அரசின் செயலாளர் பதவி தரத்தில் உள்ள றோ அமைப்பின் தலைவர், இந்தியப் பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்குபவர். இவர் தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கும், பிரதமருக்கும் தனது அறிக்கைகளை நேரடியாக அனுப்புவார்.

இந்தியாவின் பிரதான உளவு அமைப்பான 'றோ' வின் தலைமை நிர்வாகி மூடிய அறைக்குள் ரணிலுடன் பேச்சு நடத்தியிருப்பது அரசியல் மற்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்படுகிறது.

## யாழில் பாக். தூதுவரை ....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துக் கலந்துரையாடினார்.

இரு நாள் பயணமாக வடக்கிற்கு வருகை தந்துள்ள பகிஸ்தானியத் தூதுவர் நேற்று மாலை மாநகர சபையில் முதல்வர் மற்றும் ஆணையாளரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதேநேரம் நேற்று மாலை யாழில் உள்ள பள்ளிவாசலிற்குசம் சென்ற பாகிஸ்தானியத் தூதுவர் நாளை கீரிமலைக்கும் மன்னாரிற்கும் பயணிக்கின்றார்.

## வல்லைப் பாலத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல் போய் உள்ளார் எனக் கூறப்படுகின்றது. அவரைத் தேடும் பணி நேற்று இரவு இடம்பெற்றது.

அப்பகுதியில் சில இளைஞர்கள் தூண்டில் போட்டு மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஓர் இளைஞர் தவறி நீருக்குள் விழுந்தமையை அடுத்து ஏனையோர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது

புத்தூர் கலைமயதிப் பகுதியைச் சேர்ந்த19வயதுமதிக்கத்தக்க இளைஞரே இவ்வாறு தவறி விழுந்துள்ளார். அவரைத் தேடும் பணியில் அச்சுவேலிப் பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்துள்ளனர்

அவர் விழுந்தமையை அடுத்து தப்பிச் சென்றுள்ள மூன்று இளைஞர்களும் பின்னர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.






காலைக்கதிர் Kalaikkathir

# ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவராக அங்கஜன்!

## சந்திரிகா உள்ளிட்ட 9 பேருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உபதலைவர்களில் ஒருவராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் திங்கட்கிழமை கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற போதே இந்த நியமனம் வழங்கப்பட்டது.

இதேவேளை, அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்குப் பதிலாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய பொதுச் செயலாளராக முன்னாள் பிரதி சபாநாயகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலங்க சுமதிபாலவை மத்திய குழு நியமித்தது. சுமதிபால ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் பதவியையும் வகிக்கின்றார்.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த மித்ரபாலவும், கட்சியின் சிரேஷ்ட உபதலைவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஷான் விஜயலால் டி சில்வா, அங்கஜன் இராமநாதன் மற்றும் பைசர் முஸ்தபா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முதன்முதலாகத் தமிழர் ஒருவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உபதலைவர்களில் ஒருவராக நியமிக்கப் பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட ஒன்பது உறுப்பினர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை முடியும் வரை அவர்களின் உறுப்புரிமையை இடைநிறுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாக கட்சியின் பொதுச்செயலாளர் எம்.பி. தயாசிறிஜயசேகர தெரிவித்துள்ளார்.

நிமல்சிறிபாலடிசில்வா, மஹிந்த அமரவீர, ஜகத் புஷ்பகுமார, சாமர சம்பத் தசநாயக்க, சாந்த பண்டார, லசந்த அழகியவண்ண, ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர் அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொண்டு தற்போதைய அரசாங்கத்தில் இணைந்து கொண்ட ஏனைய உறுப்பினர்களாவர்.

கட்சியின் யாப்பை மீறியமைக்காக அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சீனாவால் வழங்கப்படும் பாடசாலை சீருடையின் முதல் தொகுதி அடுத்த மாதம் இலங்கைக்கு!

## கல்வி அமைச்சர் சுசில் தகவல்

சீனாவால் இலங்கைக்கு வழங்கப்படும் பாடசாலை சீருடையின் முதல் தொகுதியை அடுத்த மாதம் இலங்கை பெற்றுக் கொள்ளும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடத்துக்குத் தேவையான சீருடைகளில் 70 வீதமான சீருடைகள் சீனாவால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன.

இதற்குத் தேவையான விவரக்குறிப்புகள் ஏற்கனவே சீனாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன எனவும் அதன்படி, தயாரிக்



கப்பட்ட சீருடைகளின் முதல் பகுதி அடுத்த மாதம் இலங்கைக்கு வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

# நாட்டில் சிறு குழந்தைகளிடையே அதிகரிக்கும் வைரஸ் காய்ச்சல்!

சிறு குழந்தைகளிடையே வைரஸ் காய்ச்சல் அதிகரித்து வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலை தெரிவித்துள்ளது.

எனவே, பெற்றோர் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டுமென அந்த வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

குழந்தைகளுக்கு நுரையீரல் தொடர்பான நோய் நிலைமையும் அதிகரித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் சிறார்களுக்கு இன்ப்ளுவென்சாவுக்கு இணையான புதிய நோய் பரவி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் சிறார்களுக்கு காய்ச்சல், தலைவலி, தடிமன், தும்மல், உடல் வலி, வாந்தி போன்ற நோய் அறிகுறிகள் காணப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி 99 லட்சம் ரூபாவு பணமோசடி

## மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு – வடலியடைப்பு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கனடாவிற்கு அனுப்புவதாக கூறி 99 லட்சத்து 35 ஆயிரம் ரூபாவை மோசடி செய்தார் என நேற்று (செவ்வாய்க் கிழமை) மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பகுதிகளைச் சேர்ந்த இருவரிடம் கனடாவிற்கு அனுப்புவதாக கூறி பெறப்பட்ட 55 லட்சம் ரூபா மற்றும் 44 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பணம் இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது. கடந்த சித்திரை மாதம் இவ்வாறு பணம் பெறப்பட்டதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொழிலுக்காக வெளிநாடு செல்பவர்கள் அதிகரிப்பு!

நாட்டில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு தொழிலுக்காக வெளிநாடு செல்பவர்களின் எண்ணிக்கை 150 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரையில், 2 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்று பல நாடுகளுக்கு சென்றுள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருட இறுதிக்குள் அந்த எண்ணிக்கை 3 லட்சமாக அதிகரிக்கலாம் என அந்தப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கு செல்பவர்களில் பெரும்பான்மையானவர்கள் விசேட தகைமைகள் எதனையும் கொள்ளாதவர்கள் என்றும் இதில் 60 சதவீதமானவர்கள் ஆண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க தூதர் கருவுடன் பேச்சு!



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் முன்னாள் சபாநாயகர் கருஜெயசூரியவை சந்தித்து பேச்சுகளை மேற்கொண்டுள்ளார்.

தனது ருவிட்டர் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அனைவருக்குமான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பாதையில் நல்லாட்சி மற்றும் வெளிப்படைதன்மையின் முக்கியத்துவம் தொடர்பாக முன்னாள் சபாநாயகருடன் பேச்சுகளை மேற்கொண்டார் என அவர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற கண்காணிப்பு குழுக்களை வலுப்படுத்துவது தொடர்பாகவும் ஆராய்ந்தார் என அவர் தெரிவித்துள்ளார்.

# 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை குறைக்கவோ இரத்துச் செய்யவோ தீர்மானிக்கவில்லையாம்!

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு



நாட்டில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை குறைக்கவோ அல்லது இரத்து செய்யவோ தீர்மானிக்கவில்லையென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் 2 ஆம் வாசிப்பு மீதான விவாதத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி பிரதேசங்களில் இதற்காக காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கும் இந்த கொடுப்பனவு வழங்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இந்தக் கொடுப்பனவு தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றதென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதிக்கும் இந்தக் கொடுப்பனவுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# அதிகரிக்கப்படவுள்ள தூதரக சேவைக் கட்டண விவரங்களை வெளியிட்ட வெளிவிவகார அமைச்சு!

தூதரக சேவைக் கட்டணங்களை (கொன்சூலர் சேவைக் கட்டணம்) அதிகரிப்பதற்கு வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளதுடன், மேற்படி கட்டண அதிகரிப்பு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை சான்றிதழின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கட்டணம் 500 ரூபாவிலிருந்து 800 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், வெளிநாட்டு பிரஜைகளுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கும் எந்தவொரு ஆவணத்தின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கட்டணம் 1,500 ரூபாவிலிருந்து 3,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2022இல் வெளியிடப்பெற்றது.